சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **224 / 2022**

பெயர்: பாஸ்கர் வா.சா.1 தேதி **25.06.2025**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சர்வே எண். 460/18A என்பது சர்வே எண். 460/18B க்கு மேற்கு புறத்தில் உள்ளது. சர்வே எண். 460/18C என்பது தென்புறமாக உள்ளது. இரண்டாவது இலக்க சொத்தில் வீடு உள்ளது. இரண்டாவது இலக்க சொத்தில் உள்ள வீடானது எப்பொழுது கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் 30 ஆண்டுகாலமாக வெளியூரில் வேலை பார்த்துக்கொண்டு சொந்த ஊரிக்கு வந்து கொண்டிருப்பேன். இரண்டாவது இலக்க சொத்தானது பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக என்னிடம் சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் சொல்லிய சமயத்தில் வீடு இருந்தது. மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு எப்பொழுது பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. இரண்டாவது இலக்க சொத்தானது வீட்டிற்கு கதவு எண்உள்ளது, ஆனால் கதவு எண் எனக்கு தெரியாது. மேற்படி வீட்டிற்கான மின் கட்டணம், வீட்டு ரசீது ஆகியவைகளை பிரதிவாதிகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி வீட்டிற்கு நான் வீட்டு வரி செலுத்தியதில்லை. எனது தகப்பனார் உயிருடன் உள்ளார். அவர் திடகாத்திரமாக உள்ளார். எனது உடன் பிறந்த அக்கா ஒருவர் உள்ளார். எனது தகப்பனார் கிரையம் வாங்கியது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது.

2. எனது அப்பா கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு தான் எனது அப்பா யாரிடம் கிரையம் பெற்றார் என்கின்ற விவரம் எனக்கு தெரியும். எனது அப்பாவிற்கு கிரையம் செய்து கொடுத்தவர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு கிரையம் செய்து கொடுத்தவர்களுக்கு பூர்விக வகையில் பாத்தியம் என்று தெரிந்துகொண்டேன். எனது அப்பா கிரையம் பெற்ற நபர்களுக்கு சொத்திற்கான ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் பட்டா மட்டும் உள்ளது. மேற்படி எனது தகப்பனார் கிரையம் கொடுத்த நபர்களுக்கு பட்டா இருந்த சங்கதி எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் 2005 - 2006ம் ஆண்டு வாக்கில் தெரியும். மேற்படி பட்டாவினை நான் நகல் எதுவும் எடுக்கவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் தான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி பட்டாவின் நகல் பெற்றேன். மேற்படி பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா நான்கு பேர் பெயரில் இருந்தது. நல்லப்ப ரெட்டியார் மற்றும் மும்மாச்சி ரெட்டியார் மற்றும்

இரண்டு பேர்கள் பெயரில் இருந்தது அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-1 ஆவணத்தில் எனது அப்பாவிற்கு கிரையம் செய்து கொடுத்தாக கூறக்கூடிய நபர்களின் பெயரில் பட்டா உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை பிறப்பித்துக்கொடுத்தாக கூறக்கூடிய நபர்களுக்கு வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்துக்களுக்கு அனுபவமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல. பிராதில் கண்டுள்ள மூன்று சொத்துக்களும் ஆதியில் சர்வே எண். 460/18-ல் கட்டுப்பட்டிருந்ததா என்றால் எனக்கு தெரியாது.

3. எனது தாயார் 2023ம் ஆண்டில் இறந்து போய்விட்டார். எனது தாயார் உயில் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு மூன்று வருடத்திற்கு முன்னர் மேற்படி வழக்கு சொத்தினை அளக்க சென்றேனா என்றால் சென்றேன். சர்வேயரை அழைத்து சென்றேன். சர்வேயரை அளக்க மனுக்கொடுத்தேன். சர்வேயர் அளப்பதற்கு இணையதள வழியில் மனு செய்தேன். அவ்வாறு அளக்க சென்ற சமயத்தில் எனது தகப்பனார் வந்தாரா என்றால் வந்தார். அன்றைய தினம் இவ்வழக்கில் கண்ட மூன்று சொத்துக்களை அளந்தார்களா என்றால் அளக்கவில்லை. அன்றைய தினம் தான் சர்வே எண். 460/18Bக்குள் வீடு இருந்தது என சர்வேயர் என்னிடம் வாய்மொழியாக கூறினார். மேற்படி வீட்டில் தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள். அது அளந்த அன்றே எனக்கு தெரியும். மேற்படி அளப்பதற்கு முன்னர் மேற்படி வீடு அதே இடத்தில் இருக்கிறது என்கின்ற சங்கதி 10 ஆண்டுகளாக தெரியும். மேற்படி 10 ஆண்டுகளாக பிரதிவாதிகள் மேற்படி வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியும். ஆனால் மேற்படி வீடானது சர்வே எண். 460/18B -ல் உள்ளது என்று அளந்த அன்று தான் தெரியும். (பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.